வணக்கம்,

எமது வளாகத்தின் சீரான செயற்பாட்டை கருத்திற் கொண்டும் பல பெற்றோர்கள் ஆசிரியர்களின் மாணவர்களின் சந்தேகங்களை தெளிவுபடுத்தும் நோக்கத்துடனும் இத்தகவலை மீண்டும் அறிவிக்கின்றோம்.

எமது எதிர்கால தமிழ் சந்ததியர் தமிழ் கற்கவும் எங்களது அடையாளத்தை பேணவேண்டும் என்ற நோக்கிலும் பலர் ஆசிரியராகவும் சிலர் நிர்வாகிகளாகவும் சிரமாதான பணியாளர்களாக எந்தவித ஊதியமும் இல்லாமல் பல மணி நேரங்களை தங்களின் குடும்ப சுமையோடு பிள்ளைகளின் தமிழ் வளர்ச்சிக்காக (தங்கள் நேரத்தை) தமிழ் வளர்ச்சிக்காக செலவளிக்கின்றனர் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பல நாடளாவிய நோர்வேஜிய அமைப்புகள் தமது தலைமக்காரியாலயங்களை சொந்த கட்டடங்களில் வைத்திருக்கிறார்கள். அக்கட்டிடங்களுக்கான செலவீனங்களை நோர்வே முழுவதிலிருந்து வரும் வருமானம்/நன்கொடை பணத்திலிருந்துதான் பராமரிகிறார்கள். எமது தமிழ் கலாச்சாரத்தை தொடர்ந்து பாதுகாப்பதற்கு எமக்கும் ஓர் சொந்த கட்டிடம் அவசியம் என எல்லோரும் அறிவீர்கள்.

TRVS இன் முக்கிய பணிகள் றொம்மனிலுள்ள எம் மக்களின் கட்டிடத்தில் நடைபெறுகிறது என்பதற்கு சில உதாரணங்கள

- மாணவர்களுக்கான பாடநூல் தயாரித்தல்/மீளமைத்தல்
- பரீட்சைதாள் தயாரித்தல்
- ஆசிரியர் பட்டறை நடாத்துதல்
- வளாக கூட்டம் நடாத்துதல்
- ஆங்கில வகுப்புகள் நடாத்துதல்
- Lekse hjelp நடாத்துதல்
- முதியோர் முற்றம் நடாத்துதல்
- கலை வகுப்புகள் நடாத்துதல்
- மருத்துவ பரிசோதணை நடாத்துதல்
- பல அமைப்புகளுக்கான கூட்டம் நடாத்துதல்

  பெற்றோர் பட்டறைகள், கலந்துரையாடல்கள்

  கல்வி, கலை, விளையாட்டு உபகரணங்களை பாதுகாத்தல்
- Robot kurs நடாத்துதல்
- 18.01.2020 பொங்கல் விழாவிற்கு நோர்வே கலாச்சார அமைச்சர் வருகை

இந்த நடைமுறைகளை மாற்றவேண்டும் என அங்கத்தவர் விரும்பினால் அதற்கான வழிமுறை தனிப்பட்ட முறையில் கலந்துரையாடலும் பொதுக்கூட்டத்திற்குக் குறித்த கரிசனைகளை தக்கமுறையில் எடுத்துச்செல்வதுமே ஆகும். இதுவே பங்குபெறும் ஜனநாயக முறைசார்ந்த அறமாகும்.

ஒரு சிலரால் ஏற்படுத்தியிருக்கும் சர்ச்சைக்குக் குறைந்தது 12 மாத காலப் பின்னணி இருக்கிறது. இது குறித்த வாதப்பிரதிவாதங்கள் சகல மட்டங்களிலும் பொறுப்பான முறையில் ஆலோசனைக்குள்ளாக்கப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்படியாக தமிழரின் பல தேவைகளை பூர்த்தி செய்யும் தமிழருக்கான ஒரு கட்டிடமாக தமிழரின் அடையாளமாக பல இனமக்களுக்கு முன்னுதாரணமாக இன்று நிமிர்ந்து நிற்கிறது. இந்த கட்டிடத்தை பாதுகாப்பது பெற்றோரின் கடமையல்லவா!

அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூட நிர்வாகத்தின் யாப்பு விதிகளும், கட்டண முறைகளும் அனைத்து வளாகங்களின் பங்களிப்போடு வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுபவை.

பெற்றோர்களாகிய நீங்கள் சிந்தித்து செயல்படுவது மிக மிக அவசியம். அதாவது தமிழர் வள மேம்பாட்டு நிதி 200 / 5000 Kr செலுத்தி தற்போதைய நடைமுறை யாப்பையும் , 16 வளாகங்கள் சேர்ந்து ஜனநாயக முறைப்படி எடுத்த முடிவை ஏற்று கொண்டு தங்களின் பிள்ளையின் தமிழ்கல்வியின் எதிர்காலத்தை மாணவர்களின் கல்வி நடவடிகைகளைச் சீராகவும், நிறுவன ஒழுங்குமுறைப்படியும் தொடருவதற்கு அனைவரையும் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறோம்.

தொடர்புகளுக்கு தொலைபேசி இல **91875537**

இப்படிக்கு

நிர்வாகம்

Bank konto: 1503.25.88384.
Kontakt info : Postboks 88, 1476 Rasta.
Besøk adresse: Åsenskole, Nordlifaret 46, 1473 Lørenskog.
Mobil : 91875537.
Hjemmeside:
http://lorenskog.annai.no.
Org.nr 997 582 365